மூல (வங்கி) பிரதி

## அனுப்பீட்டு விண்ணப்பம்

தயவுசெய்து பின்வருவதைச் செய்யவும்/வழங்கவும்: ☐ கோரல் வரைவு/காசாளர் கட்டளை

☐ SLIPS ☐ கணக்கு மாற்றம்

(விண்ணப்பத்தை பெரிய **ஆங்கில எழுத்துக்களில் கறுப்புப்** பேனாவினால் நிரப்பவும் அல்லது டைப் செய்யவும்)

| | | |
|---|---|---|
| கிளையின் பெயர்: | திகதி (dd/mm/yyyy) | அறிவுறுத்தல்கள் மறுபக்கத்தில் |
| அனுப்பீட்டைப் பற்று வைக்கும் கணக்கு இல. | | பற்று வைக்கும் நாணயம் |
| அறவீடுகள் கண. இல.<br>பயனடைபவரின் | ஏனைய சகல அறவீடுகளும்<br>பயனடைபவரின் கணக்கிற்கு | சகல அறவீடுகளும்<br>கணக்கிற்கு |

### அனுப்புபவரின் விபரங்கள்

| | |
|---|---|
| பெயர் | தொலைபேசி இலக்கம் |
| முகவரி | மொபைல் இலக்கம் |
| தே.அ.அ./கடவுச்சீட்டு/வர்த்தகப் பதிவு இல. | தொலைநகல் இலக்கம் |

### கொடுப்பனவு விபரங்கள்

| | |
|---|---|
| அனுப்பீட்டு நாணயத் தொகை<br>அல்லது அனுப்பீட்டு நாணயத் தொகைக்குச்<br>சமமான தொகை | நடப்பிலுள்ள பரிவர்த்தனை<br>வீதத்தில் மாற்றப்பட வேண்டிய<br>அனுப்பீட்டு அல்லது சமமான<br>நாணயத் தொகையைக்<br>குறிப்பிடவும். |
| நாணயமும் தொகையும் (எழுத்துக்களில்) | |

### பயனடைபவரின் (பெறுபவரின்) விபரங்கள்

| | | |
|---|---|---|
| பயனடைபவரின் கணக்கு இலக்கம்:<br>பயனடைபவரின் வங்கியின் பெயர்:<br>பயனடைபவரின் வங்கியின் முகவரி:<br>அனுப்பீட்டிற்குரிய நாடு:<br>பயனடைபவரின் முழுப் பெயர்:<br>பயனடைபவரின் முகவரி: | | |
| வரைவு / காசாளர் கட்டளை வழங்கல்:<br>என்னால் சேகரிக்கப்படும் வரை வங்கியில் வைத்திருக்கவும். | எனது முகவரிக்குத் தபாலில் அனுப்பவும். | பயனடைபவரின் முகவரிக்குத் தபாலில் அனுப்பவும். |
| வைத்திருப்பவரின் பெயர்: | அடையாள அட்டை இல. | |

**கொடுப்பனவு நோக்கத்தின் பிரகடனம்:**

மேற்குறிப்பிட்ட தொகையை கீழே விபரிக்கப்பட்டுள்ள **சட்டபூர்வ நோக்கத்திற்காக** அனுப்பீடு செய்ய என்னால்/எம்மால் வங்கிக்கு
அதிகாரமளிக்கப்படுகின்றது. **இணைப்பு 1இல் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளை** நான்/நாம் அனுசரிப்பேன்/அனுசரிப்போம்.

(அனுப்பீட்டின் நோக்கத்தை இங்கு குறிப்பிடவும்)

| | |
|---|---|
| பிரதான கணக்கு வைப்பாளரின் **கையொப்பம்** இங்கே | இரண்டாவது கணக்கு வைப்பாளரின் **கையொப்பம்** இங்கே |

வங்கியின் பாவனைக்கு மட்டும்

| | | |
|---|---|---|
| Signature verified | - | கையொப்பம் உறுதிசெய்யப்பட்டது |
| SRL/AML Completed | - | SRL/AML பூர்த்தி செய்யப்பட்டது |
| Fax indemnity held (for fax receipt only) | - | ∴பெக்ஸ் இழப்பெதிர்காப்பு உள்ளது (∴பெக்ஸ்களுக்கு மட்டும்) |
| Call back done | - | மீள் அழைப்புச் செய்யப்பட்டுள்ளது |
| Transaction Reference No. | - | கொடுக்கல் வாங்கல் தொடர்பு இல. |
| Input by | - | பதிவுகளைச் செய்தவர் |

**இணைப்பு 01**

**கணக்கு மாற்றங்கள், SLIPS, கோரல் வரைவுகள் மற்றும் காசாளர் கட்டளைகளை ஆளுகை செய்யும் விதிகளும் நிபந்தனைகளும்**

**1. கட்டணங்கள் மற்றும் தரகுப்பணங்கள்**

(அ) அனுப்பீட்டிற்கான விண்ணப்பத்தின் செயற்படுத்தல்/கோரல் வரைவு வழங்கல் தொடர்பான கட்டணங்களையும் தரகுப்பணங்களையும் வங்கியானது, ஏற்கனவே வெளியிடப்பட்ட வீதங்கள் மற்றும் கட்டணத் திட்டத்திற்கேற்ப, வாடிக்கையாளரின் கணக்கில் பற்று வைக்கும். இக் கட்டணங்கள், வங்கியானது தனது சுயவிருப்பின் பேரில் காலத்திற்குக் காலம் மாற்றக்கூடும்.

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அறிவுறுத்தல்கள் எதுவும் இல்லாத பட்சத்தில், இலங்கைக்கு வெளியிலான சகல கட்டணங்களும் தரகுப்பணங்களும் பயனடைபவரின் கணக்கில் பற்று வைக்கப்படும்.

(இ) பிரதிநிதித்துவ வங்கியின் தரகுப்பணங்கள், கட்டணங்கள் அல்லது ஏனைய அறவீடுகள் - பயனடைபவரின் கணக்கிற்குக் கொடுப்பனவைச் செய்யும்போது, ஒரு பிரதிநிதித்துவ வங்கியானது, தரகுப்பணங்கள், கட்டணங்கள் அல்லது ஏனைய அறவீடுகளை அறவிடக்கூடும். பிரதிநிதித்துவ வங்கி இத்தகைய தரகுப்பணங்கள், கட்டணங்கள் அல்லது அறவீடுகளை, பயனடைபவரின் கணக்குச் செலுத்தப்படும் பணத்திலிருந்து கழித்துக்கொள்ளலாம் அல்லது SCBக்கு பாரப்படுத்தலாம்.

கழிவு மேற்கொள்ளப்படும் பட்சத்தில், உங்கள் அறிவுறுத்தலில் குறிப்பிடப்பட்ட கொடுப்பனவுத் தொகையைவிட குறைவான தொகையையே பயனடைபவர் பெறுவார். தரகுப்பணங்கள், கட்டணங்கள் அல்லது ஏனைய அறவீடுகள் SCBக்கு பாரப்படுத்தும் பட்சத்தில், வாடிக்கையாளர் அத் தொகையை SCBக்கு மீளளிக்க வேண்டும்.

(ஈ) கணக்கில் போதிய பணம் இல்லாமையினால் செயற்படுத்தப்பட முடியாத ஒவ்வொரு கொடுப்பனவின் பேரிலும் வங்கி தனது சுயவிருப்பின் பேரில் கட்டணம் ஒன்றை விதிக்கக்கூடும்.

2. **வெளிநாட்டு நாணய மாற்றங்களும் வீதங்களும்**

(அ) நாணய மாற்றம் தேவைப்படும் கொடுக்கல் வாங்கல்களைப் பொறுத்தவரையில், கொடுப்பனவு நாணயத் தொகையானது கொடுக்கல் வாங்கல் செயற்படுத்தப்படும் நேரத்தில் சம்பந்தப்பட்ட நாணயம் தொடர்பாக நிலவிய கொள்வனவு மற்றும் விற்பனைப் பரிவர்த்தனை வீதங்களுக்கு அமைவாக அல்லது உலகளாவிய சந்தை வணிகர்களினால் ஒப்புக்கொள்ளப்பட்ட பரிவர்த்தனை வீதங்களுக்கு அமைவாக வங்கியினால் மாற்றப்படும்.

3. **தகவல் வெளியிடுகை**

உங்கள் அறிவுறுத்தல்களைச் செயற்படுத்துவதற்காகவும் இலங்கையின் பொருத்தமான சட்டங்களை அனுசரித்து நடப்பதற்காகவும், உங்களைப் பற்றிய தகவல்களை வங்கி சேகரிக்கின்றது. அத்தகைய தகவல்களை பயனடைபவரின் வங்கிக்கு, பிரதிநிதி வங்கி ஒன்றிற்கு அல்லது சம்பந்தப்பட்ட அரசாங்கத்திற்கு அல்லது ஒழுங்குபடுத்தும் அமைப்பிற்கு வெளிப்படுத்தும் உரிமை வங்கிக்கு உண்டு.

4. **நியாயாதிக்கம்**

(அ) இந்த ஒப்பந்தம் இலங்கையின் சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுகின்றது. இது தொடர்பான ஏதேனும் உரிமைக் கோரிக்கைகளை விசாரிக்க இலங்கையிலுள்ள நீதிமன்றங்கள் பூரண அதிகாரத்தைக் கொண்டுள்ளன.

(ஆ) கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் நாட்டின் சட்டங்களுக்கு முரணாக இல்லாத பட்சத்தில், கோரல் வரைவானது எந்த நாட்டில் வழங்கப்பட்டதோ அந்த நாட்டின் சட்டங்களினால் ஆளுகை செய்யப்படும்.

5. **நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாடு/ஏனைய வரையறைகள்**

அனுப்பீட்டின் பணமாக்கலானது, அது எந்த நாட்டில் பணமாக மாற்றப்படுகிறதோ அந்த நாட்டின் விதிகள் மற்றும் பிரமாணங்களினால் விதிக்கப்படும் ஏதேனும் பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகள் அல்லது ஏனைய வரையறைகளுக்கு அமைவானதாக இருக்கும். அத்தகைய விதிகள் மற்றும் பிரமாணங்களின் காரணமாக ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு அல்லது தாமதத்திற்கு வங்கியை அல்லது அதன் பிரதிநிதிகளை அல்லது முகவர்களைப் பொறுப்பாளியாக்க முடியாது.

6. **பணம் தூய்மையாக்கும் மோசடி/சட்டவிரோத கொடுக்கல் வாங்கல்கள்**

சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கலில் ஏதேனுமொரு நாட்டின் சட்டம் அல்லது பிரமாணம் ஏவரேனும் ஒருவரால் மீறப்பட்டுள்ளதென வங்கி சந்தேகிக்குமானால், அக்

கொடுப்பனவை மறுக்கும் உரிமை வங்கிக்கு உண்டு. கொடுப்பனவில் சம்பந்தப்பட்ட ஒருவா் அல்லது ஓா் அதிகார அமைப்பு, சட்டம் அல்லது பிரமாணங்களின் அனுசரிப்புத் தொடா்பான தகவல்களை அல்லது விளக்கத்தைக் கோருவதால் அல்லது கொடுப்பனவைச் செயற்படுத்த மறுப்பதால், ஒரு கொடுப்பனவு தாமதிக்கலாம் அல்லது மறுக்கப்படலாம்.

## 7. வேலை நாட்கள்

காலத்திற்குக் காலம் வங்கிக் கிளைகளினால் அல்லது நிலையங்களினால் அறிவிக்கப்படும் காலக்கெடுக்களுக்குள் வங்கிக்குக் கிடைக்கும் விண்ணப்பங்களைச் செயற்படுத்த, வங்கி தன்னாலியன்ற நியாயமான முயற்சிகளை மேற்கொள்ளும். அத்தகைய காலக்கெடுக்களுக்குப் பின்னா் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள், அடுத்த வேலை நாளில் செயற்படுத்தப்படும். இந்த நோக்கத்திற்காக சகல வங்கி விடுமுறைகளும் வார இறுதி நாட்களும் வேலை செய்யப்படாத நாட்களாகக் கருதப்படும். கொடுப்பனவுத் திகதி ஒரு வங்கி விடுமுறை தினத்தில் நிகழுமாயின், கொடுப்பனவானது அடுத்த வேலை நாளில் மேற்கொள்ளப்படும்.

## 8. விசாரணைகள், கொடுப்பனவு நிறுத்தம் மற்றும் இரத்துச்செய்கை

மட்டுப்படுத்தப்பட்ட சில சந்தா்ப்பங்களில், கொடுப்பனவு அறிவுறுத்தலை நிறுத்த அல்லது இரத்துச்செய்ய வங்கி தன்னாலியன்ற முயற்சிகளை மேற்கொள்ளும். விண்ணப்பதாரா் தனது வங்கியிடமிருந்து அனுப்பீட்டுத் தொகையை மீளப்பெற விரும்பினால், வங்கியானது பணத் தொகையைப் பயனடைபவரின் வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட பின்னா், தனது கட்டணங்கள் மற்றும் செலவுகளைக் கழித்துக் கொண்டு, சம்பந்தப்பட்ட நாணயத்தின் அப்போதய கொள்வனவு வீதத்தில், விண்ணப்பதாரருக்கு மீளளிப்பை வழங்க வங்கி தனது சுயவிருப்பின் பேரில் முடிவு செய்யலாம். “நிலைமை பற்றிய விசாரணைகள், கொடுப்பனவு நிறுத்தம், இரத்துச்செய்கை என்பன தொடா்பான சகல வேண்டுகோள்களுக்குமான கட்டணங்கள், ஏற்கவே வெளியிடப்பட்ட வீதங்கள் மற்றும் கட்டணங்கள் வழிகாட்டிக்கு அமைவாக விதிக்கப்பட்டு, வாடிக்கையாளரின் கணக்கில் பற்று வைக்கப்படும்.

## 9. தொலைந்த அல்லது களவாடப்பட்ட கோரல் வரைவுகள்/காசாளா் கட்டளைகள்

ஒரு கோரல் வரைவு/காசாளா் கட்டளை தொலையும் அல்லது களவாடப்படும் பட்சத்தில், வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க ஓா் இழப்பெதிா்காப்பை வங்கிக்கு வழங்க வாடிக்கையாளா் இணங்குகின்றாா். கோரல் வரைவுகள்/காசாளா் கட்டளைகள் பயனடைபவருக்கு நேரடியாக அனுப்பப்படும் சந்தா்ப்பங்களில், தந்தி அல்லது தபால் சேவையினரின் ஏதேனும் தாமதம், தவறு அல்லது விடுபடுகைக்கு வங்கியை அல்லது

அதன் கிளைகளை அல்லது பிரதிநிதிகளைப் பொறுப்பாளியாக்க முடியாது. கோரல் வரைவு/காசாளர் கட்டளை தொலையும் அல்லது களவாடப்படும்போது அதற்கான மீளளிப்பை வழங்கவேண்டிய கடமை வங்கிக்குக் கிடையாது.

## 10. கொடுப்பனவு முன்னுரிமை

கொடுப்பனவுத் திகதியைப் பொறுத்தமட்டில், சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவு அறிவித்தல்களின் பேரிலான அல்லது வங்கியுடன் செய்துகொள்ளப்பட்ட வேறேதும் ஏற்பாடுகளின் அடிப்படையிலான இக் கொடுப்பனவுக் கட்டளையின் முன்னுரிமையைத் தீர்மானிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு. வங்கி தனது பூரண சுயவிருப்பின் பேரில் மற்றைய கொடுப்பனவு முன்னுரிமைகளையும் தீர்மானித்த பின்னர், இக் கொடுப்பனவின் விளைவாகக் கணக்கில் மேலதிகப் பற்று ஏற்படுமெனக் கருதினால், அல்லது ஏற்கனவே பெறப்பட்ட மேலதிகப் பற்றின் உச்சவரம்பு மீறப்பெடுமெனக் கருதினால், இக் கொடுப்பனவுக் கட்டளையின் கீழான கொடுப்பனவை மறுக்க முடியும்.

## 11. உடன்படிக்கையும் அதிகாரமளிப்பும்

அனுப்பீட்டு விண்ணப்பத்தில் கைச்சாத்திடுவதன் மூலம் நீங்கள் பின்வருவனவற்றை ஒப்புக்கொண்டு உடன்படுகின்றீர்கள்: (அ) நீங்கள் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து விளங்கிக்கொண்டு, அவற்றிற்குக் கட்டுப்பட்டு நடக்க இணங்குகின்றீர்கள். (ஆ) இந்த விண்ணப்பம் தொடர்பாக நீங்கள் ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கிக்கு வழங்கிய சகல தகவல்களும் உண்மையானமை மற்றும் சரியானவை என்று நீங்கள் உறுதிப்படுத்துகின்றீர்கள். (இ) மொத்தக் கொடுப்பனவு, மற்றும் இந்த நிபந்தனைகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள தரகுப்பணம் (இருப்பின்), ஏனைய கட்டணங்கள், செலவுகள், தீர்வைகள் என்பவற்றை இந்த ஆவணத்தின் ''கொடுப்பனவுப் படிவம்'' அல்லது :அறவீடுகள் படிவம்'' பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள உங்கள் கணக்கில் பற்று வைக்க நீங்கள் ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றீர்கள். (ஈ) அனுப்பீட்டு விண்ணப்பம் வங்கியினால் செயற்படுத்தப்படுவதற்கு முன்னர், சில சூழ்நிலைகளின் கீழ், நீங்கள் மேலதிக எழுத்துமூல கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டியிருக்கும்.